**காங்கயம் நகராட்சி**

**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் பிலவ வருடம் தமிழ் மாதம் புரட்டாசி 22 ஆம் நாள் ஆங்கில வருடம் 2021 அக்டோபர் மாதம் 08–ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**திரு.ம.முத்துக்குமார்**
**தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**மன்றப்பொருள்:1**

**ந.க.எண்.1485/ 2021 /எச்1**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/ஈஏ2–இல் வெளியிட்டுள்ளபடி காங்கயம் நகராட்சியில் பொது சுகாதார பணி மற்றும் குடிநீர் திட்டப்பணிகளை செவ்வனே செயல்படுத்திட வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் அமர்த்த அளவுகோல் மற்றும் பொது விதிமுறைகளை பின்பற்றி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியாளர் விவரம் விபரம் | அளவுகோல்கள்படி தேவைப்படும் பணியாளர்கள் | தற்போதுள்ள நிரந்தர பணியாளர்கள். | தேவைப்படும் பணியாளர்கள் |
|---|---|---|---|---|
| பொது சுகாதாரப்பிரிவு | | | | |
| 1 | தூய்மை பணியாளர்கள் | 90 | 38 | 52 |
| 2 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 9 | 2 | 7 |
| 3 | ஓட்டுநர் | 16 | 1 | 15 |
| | **மொத்தம்** | **115** | **41** | **74** |
| குடிநீர் திட்டப்பிரிவு | | | | |
| 1 | மின்னாளர் | 6 | 1 | 5 |
| 2 | பராமரிப்பு உதவியாளர் | 20 | 2 | 18 |
| 3 | குடிநீர் வடிகட்டி படுகை இயக்குநர் | 3 | 0 | 3 |
| | **மொத்தம்** | **29** | **3** | **26** |

மேற்கண்ட அளவுகோலின்படி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள சுகாதார பணியாளர்களை அமர்த்திக்கொள்ளும் செலவினம் ஓராண்டுக்கு 153.34 இலட்சமும், குடிநீர் திட்ட பணிகளுக்கு தேவையான பணியாளர்களை அமர்த்த ஓராண்டுக்கு 65.11 இலட்சமும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்திக்கொள்ள உரிய கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வெளியிட்டுள்ள அளவுகோல் மற்றும் பொதுவிதிமுறைகளை முழுமையாக கடைபிடித்து தயார் செய்யப்பட்ட கருத்துருவிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1920 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 2**

**கோப்பு எண் : 1773 /2017 /இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனத்திற்கு (ஈப்பு வாகனம் எண்.TN56Y1031) மாதாந்திர மற்றும் காலமுறை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவேண்யுள்ளது. மேலும், குடிநீர் பணிகள், வருவாய் பணிகள் மற்றும் திட்டப்பணிகள் ஆய்வு மற்றும் உயர் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் கலந்தாய்வு போன்ற பணிகள் தடையின்றி நடைபெற ஈப்பு வாகனம் பராமரிப்புப் பணிகள் அத்தியாவசியம் என்பதால் மேற்படி பராமரிப்பு பணிகளை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான CAI Mahindra நிறுவனத்தில் உடனுக்குடன் ஒப்படைப்பு செய்து பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மற்றும் வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்புத்தொகையை யுனைடெட் இண்டியா நிறுவனத்தில் செலுத்தவும் உத்தேச மதிப்பீடு ரூ. 2.00 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1921 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்ப்பட்டது |

**மன்றப்பொருள்: 3**

**கோப்பு எண்: 1321 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கோவை ரோடு ஏ.சி நகர் பகுதியில் ஏற்கனவே ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் பங்களாபுதுார் ரோடு வரை வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் ஏ.சி நகர் இரண்டாவது வீதியில் கூடுதலாக வடிகால் வசதி கேட்டு இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். மேலும், வடிகாலின் குறுக்காக செல்லும் பாதைகளுக்கு பாலம் அமைக்கவும் கோரி இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இந்த பணிகள் மிகவும் அவசியமானதாக உள்ளது. எனவே, மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப் பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1922 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்ப்பட்டது |

**மன்றப்பொருள்: 4**

**கோப்பு எண்: 1344 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான அமராவதி குடிநீர் திட்டத்தின் தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 H.P Hsc Pump set பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. மேலும் மெயின் சுவிட்ச் பழுதடைந்துள்ளது. இதனால், மாற்று மின்மோட்டார் மட்டுமே இயக்கும் நிலையில் உள்ளது. எனவே, குடிநீர் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மேற்படி பழுதுகள் சரி செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது அவசியமாக உள்ளது. எனவே, மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 2.50 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப் பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1923 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்ப்பட்டது |

**மன்றப்பொருள்: 5**

**கோப்பு எண் : 1530 /2021/இ1**

காங்கயம் நகராட்சியில் திட்டப் பணிகள் மேற்கொள்வதற்காக (JJM, Market, Street light போன்ற ) கருத்துருக்கள், மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் வரைபடம் தயாரித்தல் போன்ற பணிகள் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்த பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் கருதி இதற்கான மதிப்பீடு ரூ.2.00 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப் பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1924 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்ப்பட்டது |

**மன்றப்பொருள்: 6**

**கோப்பு எண் : 1438 /2021/இ1**

காங்கயம் நகராட்சி பொதுசுகாதார பணிக்கு பயன்படும் BOV வாகனங்கள் 4 எண்ணிக்கை பழுதடைந்துள்ளது. இதனால், பொது சுகாதார பணி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனங்கள் உடனுக்குடன் பழுதுகள் சரிசெய்து நல்ல நிலையில் இயக்க வேண்டியுள்ளதால் இந்த பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.20 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப் பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1925 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது |

**மன்றப்பொருள்: 7**

**கோப்பு எண் : 1320/2021/இ1**

காங்கயம் நகராட்சி சென்னிமலை ரோடு உரக்கிடங்கில் கடந்த 30 வருடங்களாக சேகரமாகும் குப்பைக் கழிவுகளை பயோமைனிங் முறையில் செயலாக்கம் செய்து உரக்கிடங்கு நிலம் மீட்கப்பட்டது. மேலும், தினசரி சேகரம் செய்யும் குப்பைகளை Shredding machine மூலம் அரைத்து உரமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது அதிக அளவில் குப்பைகள் சேகரம் ஆவதால், ஏற்கனவே உள்ள 1 எண்ணிக்கை Shredding machine போதுமானதாக இல்லாததால் சுகாதார பணி அவசியமாக இருப்பதால் குப்பைகளை சளிக்க ஒரு ஜல்லடை இயந்திரம் மற்றும் Shredding machine 1 எண்ணிக்கை தேவைப்படுகிறது. இந்தப் பணி பொது சுகாதார பணியாக இருப்பதால் இதற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.75 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப் பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1926 |
| **நாள் :** | 08.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது |

**திரு.ம.முத்துக்குமார்**
**தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**காங்கயம் நகராட்சி**

**மன்றக்கூட்டத்தாள்**

**நிகழும் பிலவ வருடம் தமிழ் மாதம் ஐப்பசி 12 ஆம் நாள் ஆங்கில வருடம் 2021 அக்டோபர் மாதம் 29–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள காங்கயம் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நடவடிக்கைகள் விபரம்.**

**திரு.ம.முத்துக்குமார்**
**தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**

**மன்றப்பொருள்:1**

**கோப்பு எண் : 1621/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர்நிலை மேம்பாட்டு பணிகளை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் – 2021–2022 ன் கீழ் மேற்கொள்ள ரூ.**490.00** இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வெள்ளத்தாரை ஓடைக்கு தற்காப்புச் சுவர், துளையிடும் குழி, அணுகு சாலை ஆகியவை அமைக்கும் பணி மற்றும் வெள்ளத்தாரை ஓடையை துார்வாரும் பணி | 490.00 |
| | **மொத்தம்** | **490.00** |

எனவே, காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள நீர்நிலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் பணிக்காக ரூ.**490.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெரும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காண் பணிக்குத் தேவைப்படும் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1927 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்:2**

**கோப்பு எண்: 1391 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள ரீ.ச.எண்.100/1B1-ல் 0.69.64 ஹெக்டர் (1.72 ஏக்கர்) பரப்பளவு நிலத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அடிப்படை வசதிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டுள்ள விபரப்படி மதிப்பீடுகள் தயார் செய்து அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. நகராட்சிக்கு வழங்கப்பட்ட பொதுஇடத்திற்கு கம்பிவேலி அமைத்தல்–ரூ.25,000/–
2. குடிநீர் குழாய் அமைத்தல் – ரூ.1,00,000/–
3. தார் சாலை அமைத்தல் – ரூ.20,00,000/–
4. தெருவிளக்குகள் அமைத்தல் – ரூ.2,40,000/–
5. வடிகால் அமைத்தல் – ரூ. 15,00,000/–

மேற்படி பணிகளுக்கு மனைப்பிரிவு உரிமையாளர் தொகை செலுத்த வேண்டும் என்பதால் இந்த பணிகளை நகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும். எனவே, மதிப்பீடுகள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1928 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்:3**

**கோப்பு எண்: 1425 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள ரீ.ச.எண்.100/1B2-ல் 0.67.86 ஹெக்டர் (1.67 $^{1/2}$ ஏக்கர்) உள்ள குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அடிப்படை வசதிகள் மேற்கொள்ள கீழ்க்கண்டுள்ள விபரப்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

1. வடிகால் அமைத்தல் – ரூ. 21,00,000/–
2. நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் கம்பிவேலி அமைத்தல் –ரூ.25,000/–
3. குழாய் விஸ்தரிப்பு செய்தல் – ரூ.1,00,000/–
4. தார் சாலை அமைத்தல் – ரூ.17,00,000/–
5. தெருவிளக்குகள் அமைத்தல் – ரூ.2,40,000/–

மேற்படி பணிகளுக்கான மதிப்பீட்டு தொகையை மனைப்பிரிவு உரிமையாளர் செலுத்திய பின்னர் நகராட்சி மூலமாக இப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதால் மதிப்பீடுகள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1929 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 4**

**கோப்புஎண்.155/2015/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான நகரப்பேருந்து நிலைய கடை எண்.11 ன் முதல் தொகுப்பு குத்தகை காலம் 31.10.2021 உடன் முடிவடைவதால் கடையின் குத்தகை உரிமத்தினை இரண்டாம் தொகுப்பு காலத்திற்கு உரிமம் நீட்டிப்பு வழங்கக்கோரி கடையின் குத்தகைதாரர் திரு.ஹக்கிம் என்பவர் விண்ணப்பித்துள்ளார் அன்னாரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் ஏற்கனவே உள்ள வாடகை தொகையுடன் 15% உயர்வு செய்யப்பட்ட வாடகை தொகை ரூ.10810/– க்கு 01.11.2021 முதல் 31.10.2024 வரை இரண்டாம் தொகுப்பு காலத்திற்கு குத்தகை உரிமம் புதுப்பித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **பெயர்&கடை எண்** | **உரிமைக் காலம்** | **ஏற்கனவே உள்ள வாடகை** | **15% உயர்வு செய்யப்பட்ட தொகை** | **நிர்ணயிக்கப்படும் மாத வாடகை** |
|---|---|---|---|---|---|
| 1. | ஹக்கிம் , நகரப்பேருந்து நிலைய கடை எண்.11 | **01.11.2021** முதல் **31.10.2024** வரை | ரூ.9400/- | ரூ.1410/- | ரூ.10810/- |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1930 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 5**

**கோப்பு எண். 1440 / 2020/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 100/1B1 - ல் 0.69.64 ஹெக்டேர் அல்லது 1.72 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு. P.C. சண்முகம் த/பெ. சின்னசாமி கவுண்டர், என்பவர் 12.11.2020 அன்று விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 1440 / 2020/ எப்1 நாள். 26.11.2020 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க எண் 834/2021/திமா, நாள். 05.05.2021–ல் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் (மூலை முடக்கு உட்பட) பொது உபயோகம் ஆகியவைகளை உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யவும் மேலும் TANGEDCO ஒதுக்கீட்டினை மின் பகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து தானபத்திர அசல் மற்றும் நோட்டரி பப்ளிக் சான்றொப்பத்துடன் கூடிய நகல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க எண் 834/2021/திமா, நாள். 26.07.2021–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (தி.மா) எண் 182/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3706/2021, நாள் 07.07.2021 –ன் மூலம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 3705/2021 நாள் 07.07.2021 –ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் **181**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ**4(3)** த்துறை நாள், **09.12.2021–**ல் தெரிவித்துள்ளபடி, மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மனைப்பிரிவு உரிமைதாரருக்கு கேட்பு அனுப்பி மனைப்பிரிவுதாரரிடமிருந்து வசூல் செய்ய காங்கயம் நகராட்சி பொறியாளருக்கு குறிப்பு வைக்கப்பட்டதை தொடர்ந்து காங்கயம் நகராட்சி பொறியாளர் தனது 18.10.2021 –ம் தேதிய குறிப்பில் தயார் செய்த மதிப்பீட்டின் படி

| | | | |
|---|---|---|---|
| 1 | வடிகால் அமைத்தல் | - | 15,00,000 |
| 2 | நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது இடத்தில் கம்பி வேலி அமைத்தல் | - | 25,000 |
| 3 | குடிநீர் குழாய் அமைத்தல் | - | 1,00,000 |
| 4 | தார் சாலை அமைத்தல் | - | 20,00,000 |
| 5 | தெருவிளக்குகள் அமைத்தல் | - | 2,40,000 |
| | மொத்தம் | | 3865000 |

ஆக மொத்தம் ரூ.3865000/–யை நகராட்சியில் பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0011312, நாள். 18.10.2021 –இல் மனைப்பிரிவுதாரர் செலுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்காக செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1440/2020/எப்1, நாள்: 18.10.2021–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் **–** ரூ**.10450**/– , 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் –ரூ.20000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 41790/-, நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ.1000/- ஆகியவை பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0012107, 158/158/01/21-22/0012108, நாள் 28.10.2021 –ன் வாயிலாக நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.35000/– காங்கயம் இணையதள செலுத்துச் சீட்டு எண்.20211028712077, நாள். 29.10.2021 வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

திரு. P.C. சண்முகம் த/பெ. சின்னசாமி கவுண்டர், என்பவர் தனது 29.10.2021 தேதிய மனுவில் மனைப்பிரிவிற்கு செலுத்த வேண்டிய தொகையை அனைத்தும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 100/1B1 - ல் 0.69.64 ஹெக்டேர் அல்லது 1.72 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீட்டினை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்பதற்கும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1931 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 6**

**கோப்பு எண். 1441 / 2020/ எப்1**

திருப்பூர் மாவட்டம் காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 100/1B2 - ல் 0.67.86 ஹெக்டேர் அல்லது 1.67 ½ ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி திரு. NSN. தனபால் த/பெ. NSN. நடராஜ் என்பவர் 12.11.2020 அன்று விண்ணப்பித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் இவ்வலுவலக கடித ந.க எண் 1441 / 2020/ எப்1 நாள். 26.11.2020 –ன் வாயிலாக உரிய அனுமதி வேண்டி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனுதாரரின் உத்தேசத்தை பரிசீலனை செய்து நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.**156/2021**/திமா, நாள்.**12.03.2021–**ல் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் (மூலை முடக்கு உட்பட) பொது உபயோகம் ஆகியவைகளை உள்ளாட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யவும் மேலும் TANGEDCO ஒதுக்கீட்டினை மின் பகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது உள்ளாட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்து தானபத்திர அசல் மற்றும் நோட்டரி பப்ளிக் சான்றொப்பத்துடன் கூடிய நகல் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**156/2021**/திமா நாள். 23.07.2021–ல் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மனைப்பிரிவு நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு ம.வ/ந.ஊ (தி.மா) எண் 180/2021 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மின்பகிர்மானத்திற்கு (TANGEDCO) ஒதுக்கீடு செய்யப்பட்ட இடம் காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் 3704/2021, நாள் 07.07.2021 –ன் மூலம் மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், பல்லடம் மின் பகிர்மான வட்டம் அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. காங்கயம் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் ஆகியவை காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவணம் எண் 3703/2021 நாள் 07.07.2021 –ன் மூலம் ஆணையாளர், காங்கயம் நகராட்சி அவர்களுக்கு தானப்பத்திரம் வாயிலாக மனைப்பிரிவுதாரரால் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் **181**, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நவ**4(3)** த்துறை நாள், **09.12.2021–**ல் தெரிவித்துள்ளபடி, மனைப்பிரிவிற்கு தேவையான தார்சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, தெருவிளக்கு வசதி பூங்கா மற்றும் திறவிடங்களுக்கு வேலி அமைத்தல் போன்ற பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்து மனைப்பிரிவு உரிமைதாரருக்கு கேட்பு அனுப்பி மனைப்பிரிவுதாரரிடமிருந்து வசூல் செய்ய காங்கயம் நகராட்சி பொறியாளருக்கு குறிப்பு வைக்கப்பட்டதை தொடர்ந்து காங்கயம் நகராட்சி பொறியாளர் தனது 18.10.2021 –ம் தேதிய குறிப்பில் தயார் செய்த மதிப்பீட்டின் படி

| | | | |
|---|---|---|---|
| 1 | வடிகால் அமைத்தல் | - | 21,00,000 |
| 2 | நகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட பொது இடத்தில் கம்பி வேலி அமைத்தல் | - | 25,000 |
| 3 | குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் | - | 1,00,000 |
| 4 | தார் சாலை அமைத்தல் | - | 17,00,000 |
| 5 | தெருவிளக்குகள் அமைத்தல் | - | 2,40,000 |
| | மொத்தம் | | 41,65,000 |

ஆக மொத்தம் ரூ.4165000/–யை நகராட்சியில் பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/0011311, நாள். 18.10.2021 –இல் மனைப்பிரிவுதாரர் செலுத்தியுள்ளார் என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மனைப்பிரிவு அனுமதிக்காக செலுத்த வேண்டிய தொகைக்கான கேட்பு இவ்வலுவலக அறிவிப்பு ந.க எண் 1441/2020/எப்1, நாள்: 18.10.2021–ன் வாயிலாக மனைப்பிரிவுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, **1.** கூர்ந்தாய்வுக் கட்டணம் **–** ரூ**.10200/–**, 2. மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் – ரூ.20000/-, 3. அபிவிருத்திக் கட்டணம் 40720/-, நிலப்பயன்மாற்ற பரிசீலனைக் கட்டணம் ரூ.1000/- ஆகியவை பற்றுச்சீட்டு எண் 158/158/01/21-22/00012105, 158/158/01/21-22/00012106, நாள் 28.10.2021 –ன் வாயிலாக நகராட்சி கரூவூலத்தில் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.79, வீட்டு வசதி வாரியம் மற்றும் நகர்ப்புறவளர்ச்சி (நவ 4(3)) துறை, நாள் 04.05.2017 –ன் படி நிலப்பயன்மாற்ற கட்டணமாக ரூ.34000/– காங்கயம் இணையதள செலுத்துச் சீட்டு எண்.20211028712288, நாள். 29.10.2021 வாயிலாக மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

திரு. NSN. தனபால் த/பெ. NSN. நடராஜ் என்பவர் தனது 29.10.2021 தேதிய மனுவில் மனைப்பிரிவிற்கு செலுத்த வேண்டிய தொகையை அனைத்தும் செலுத்தி விட்டதாகவும் எனவே மனைப்பிரிவிற்கான இறுதி ஒப்புதல் வழுங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனவே, காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 100/1B2 - ல் 0.67.86 ஹெக்டேர் அல்லது 1.67 ½ ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீட்டினை நகர்மன்றத்தின் பராமரிப்பிற்கு ஏற்பதற்கும் மேற்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சிறப்பு மற்றும் பொது நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1932 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 7**

**கோப்பு எண்: 1585/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6, அய்யாசாமி காலனி முதல் வீதியில் மழைநீர் வடிகால் இல்லாததால், புதிய மழைநீர் வடிகால் அமைக்க அப்பகுதி பொது மக்களிடமிருந்து மனு பெறப்பட்டுள்ளது. அப்பகுதியில் வடிகால் அமைப்பது அத்தியாவசியமாக உள்ளதால் மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் நிதி மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1933 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 8**

**கோப்பு எண்: 1586/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6, பிருந்தாவன் கார்டன் பகுதியில் உள்ள ஏற்கனவே அமைந்துள்ள சிறு பாலத்தினை அகலப்படுத்தவும், மேலும் பிருந்தாவன் கார்டனில் இருந்து வரும் கழிவுநீர் குழாய் மூலம் சாலையை கடந்து செல்வதினை மாற்றி சிறு பாலம் அமைத்திடவும் அப்பகுதி பொது மக்களிடமிருந்து மனு பெறப்பட்டது. மேற்படி பணி அத்தியாவசியமாக உள்ளதால் அப்பணியை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 2.50 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் நிதி மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1934 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 9**

**கோப்பு எண் : 1498 /2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் உள்ள கங்கா நகர் பகுதியில் கடந்த 27.10.2021 அன்று **மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால்** ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது அப்பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்துத் தருமாறு பொதுமக்கள் விண்ணப்பித்தனர். எனவே, மேற்படி பகுதியில் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ளுமாறு **மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால்** தெரிவிக்கப்பட்டது. எனவே, கங்கா நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் ஆகியவற்றை அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தொகையை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1935 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 10**

**கோப்பு எண் : 1344 /2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7ல் உள்ள கே.ஜி.கே நகர் பகுதியில் கடந்த 27.10.2021 அன்று **மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களால்** ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது பொதுமக்கள் மழைநீர் வடிகால் அமைத்துத் தருமாறு கேட்டுக் கொண்டனர். அதன் அடிப்படையில் **மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்கள்** உடனடியாக பணியினை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். தற்போது அப்பகுதியில் மழைநீர் முழுவதும் வடிந்து செல்லும் வண்ணம் மழைநீர் வடிகால் கே.ஜி.கே நகர் மூன்று வீதிகளுக்கு மற்றும் முக்கிய சாலைக்கு அமைத்திட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.28.00 இலட்சம் (ரூபாய் இருபத்து எட்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், திருப்பூர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1936 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | **1.**அனுமதிக்கப்பட்டது.<br>**2.**அடிப்படை வசதிகள் மனைப்பிரிவில் மேற்கொள்ள தனித்தனியாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் உச்ச வரம்பை விட கூடுதலாக மதிப்பீடு வரும் பட்சம் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் திருப்பூர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம். |

**மன்றப்பொருள்: 11**

**கோப்பு எண் : 1391 /2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள ரீ.ச.எண்.100/1B2-ல் **0.67.86** ஹெக்டர் (**1.67** $^{1/2}$ ஏக்கர்) பரப்பளவில் உள்ள மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு மற்றும் பூங்கா அமைத்தல் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் , தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**35.00** இலட்சத்திற்கு (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், திருப்பூர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1937 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | **1.** அனுமதிக்கப்பட்டது.<br>**2.** அடிப்படை வசதிகள் மனைப்பிரிவில் மேற்கொள்ள தனித்தனியாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் உச்ச வரம்பை விட கூடுதலாக மதிப்பீடு வரும் பட்சம் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் திருப்பூர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம். |

**மன்றப்பொருள்: 12**

**கோப்பு எண் : 1425 /2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சென்னிமலை ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள ரீ.ச.எண்.100/1B1-ல் **0.69.64** ஹெக்டர் (**1.72** ஏக்கர்) பரப்பளவில் உள்ள மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலை, மழைநீர் வடிகால், தெருவிளக்கு மற்றும் பூங்கா அமைத்தல் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடுகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் , தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.**38.00** இலட்சத்திற்கு (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், திருப்பூர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| **தீர்மானம் எண் :** | 1938 |
|---|---|
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | **1.** அனுமதிக்கப்பட்டது. **2.** அடிப்படை வசதிகள் மனைப்பிரிவில் மேற்கொள்ள தனித்தனியாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நகராட்சி பொறியாளர் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் உச்ச வரம்பை விட கூடுதலாக மதிப்பீடு வரும் பட்சம் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர் திருப்பூர் அவர்களின் அனுமதி பெற்று பணி மேற்கொள்ளலாம். |

**மன்றப்பொருள்: 13**

**கோப்பு எண் 1534/2021/எச்1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை அரசாணை (நிலை) எண்.168 நாள்.16.11.2015.-இன் படி நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு சீருடை காலணிகள் மற்றும் சீருடைக்கான தையல் கூலி தொகை வழங்க கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| **ஆண் தூய்மை பணியாளர்களுக்கு** | | | | |
| காக்கி முழுக்கால் சட்டை | 1.30 X 2 | = | 2.60 | மீட்டர் |
| காக்கி அரைக்கை சட்டை | 1.75 X 2 | = | 3.50 | மீட்டர் |
| **மொத்தம்** | | = | **6.10** | **மீட்டர்** |
| தூய்மை பணியாளர்கள் **31 நபர்கள்** X **6.10 மீட்டர்** வீதம் | | = | **189.10** | **மீட்டர்** |
| ஓட்டுநர் | (1.30 X 2) (1.75 X 2) | = | 6.10 | மீட்டர் |
| அலுவலக உதவியாளர் | (1.30 X 2) (1.75 X 2) | | 6.10 | மீட்டர் |
| துப்புரவு மேற்பார்வையாளர்–2 ஜோடி | (1.30 X 2) (1.75 X 2) | = | 12.20 | மீட்டர் |
| | **மொத்தம்** | = | **24.40** | **மீட்டர்** |
| தலைப்பாகை துணி | (31 X 2) | = | 62.00 | மீட்டர் |
| **பெண் தூய்மை பணியாளர்கள்** | | | | |
| ஒரு நபருக்கு 2 எண்ணிக்கை பாலியஸ்டர் புடைவை வீதம் **2** நபர்க்கு | | = | **4 புடவைகள்** | |
| இரவிக்கைத் துணி ஒரு நபருக்கு 0.90 மீட்டர் வீதம் | (4 X 0.90) | = | **3.60** | **மீட்டர்** |

**தையல் கூலி**

**1** ஜோடி **400/–** வீதம் **2** ஜோடி **800** ரூபாய்
**33** நபர்களுக்கு **2** ஜோடி தையல் கூலி = 26400/-
ரவிக்கை **2** பெண் தூய்மை பணியாளர்களுக்கு 4 X 40 = 160/-
**மொத்தம்** = **26560/-**

**காலணி**

**1** ஜோடி காலணி ரூ.**140/–**
**33** நபர்களுக்கு **1** ஜோடி காலணி வீதம் 33 X 140 = 4620/-
**மொத்தம்** = **4620/-**

உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. **1.50** இலட்சம்

**அலுவலகக் குறிப்பு :** பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1939 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 14**

**ந.க.எண்.1582/2021/அ2**

2021–2022 ஆம் ஆண்டிற்கான குத்தகைதாரர்களுடைய வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகையாக 2017–2018 ஆம் ஆண்டு வரை எடுக்கப்பட்டுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகையிலிருந்து மேற்படியார் செலுத்த வேண்டிய குத்தகை தொகை மற்றும் தொழில் வரிக்கு ஈடு செய்து கொண்டு மீத தொகை வழங்க கோரியுள்ளனர்.

| வரிசை எண் | குத்தகை தாரர் பெயர் | கடை விபரம் | வருடம் | பதிவேடு பக்கம் எண் | பதிவேடு வரிசை எண் | இருப்பில் உள்ள வைப்பு தொகை | கடை வாடகை மற்றும் தொழில் வரி தொகை ஈடு செய்யப்படும் தொகை | திரும்ப வழங்கும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | திரு.தொ. சுரேஷ் | சென்னிமலை ரோடு காலியிட கடை எண்.1 | 2015–2016 | 35<br>36 | 39<br>40 | 10000<br>20000 | 10000<br>17600 | 0<br>0 |
| 2 | திரு.டி. சக்திவேல் | வியாழக்கிழமை வாரச்சந்தை | 2016–2017 | 43 | 64 | 50000 | 12275 | 37725 |
| 3 | பி.எஸ். பழனிச்சாமி | திங்கட்கிழமை வாரச்சந்தை | 2016–2017 | 43 | 68 | 300000 | 15525 | 284475 |
| 4 | திருமதி.எஸ். தங்கம் | நகர பேருந்து நிலைய கட்டண கழிப்பறை | 2016–2017 | 43 | 70 | 200000 | 36229 | 163771 |

மேற்படி குத்தகைதாரர்களின் இருப்பில் உள்ள காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து குத்தகைதாரர்கள் செலுத்தவேண்டிய கடை வாடகை மற்றும் தொழில் வரி தொகையினை பிடித்தம் செய்து கொண்டு மீதத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1940 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 15**

**ந.க.எண்.742 /2019/சி1**

காங்கேயம் நகராட்சியின் 2020–2021ஆம் ஆண்டிற்குரிய ஐந்தொகை கணக்கு வரவு செலவு அறிக்கை, பொது பேரேடு தயாரித்தல் மற்றும் பிரிண்ட் எடுத்து புத்தகங்கள் தயார் செய்தல்

மற்றும் இறுதி இணக்க பதிவேடு தயாரித்தல் ஆகிய பணிக்கு ஏற்படும் செலவினம் ரூ.40,000/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் இத்தொகையினை திரு.வைரவேல் என்பவருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1941 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 16**

**கோப்புஎண்.2071/2016/அ2**

காங்கயம் நகராட்சிக்கு சொந்தமான 31.03.2020 உடன் 9 வருடங்கள் முடிவடைந்த கடைகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் கடித எண்.1842/2014/அ3 நாள்.20.10.2021 ன் படி வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டு அறிக்கை வரப்பெற்று அதன் அடிப்படையில் வாடகைதாரர்களுக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகைக்கு தொடர்ந்து கடையினை நடத்திக்கொள்ள பின்வரும் வாடகைதாரர்கள் சம்மத கடிதம் அளித்து பழைய வாடகை தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகையை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர் அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | கடையின் பெயர் | வாடகைதாரர் பெயர் | மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை | தற்பொழுது உரிமம் வழங்க வேண்டிய குத்தகை காலம் |
|---|---|---|---|---|
| 1 | சென்னிமலை ரோடு நகரப்பேருந்து நிலைய கடை எண்.2 | K.K.பழனிச்சாமி | ரூ.14,200/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 2 | சென்னிமலை ரோடு நகரப்பேருந்து நிலைய கடை எண்.3 | அப்புக்குட்டி | ரூ.11,200/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 3 | சென்னிமலை ரோடு நகரப்பேருந்து நிலைய கடை எண்.5 | கிருஷ்ணசாமி | ரூ.11,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 4 | சென்னிமலை ரோடு நகரப்பேருந்து நிலைய கடை எண்.7 | D.சுப்ரமணியம் | ரூ.11,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 5 | சென்னிமலை ரோடு நகரப்பேருந்து நிலைய கடை எண்.8 | M.சின்னச்சாமி | ரூ.11,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | சென்னிமலை ரோடு வாரச்சந்தை கடை எண்.3 | S.N.சுப்ரமணியம் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 7 | சென்னிமலை ரோடு வாரச்சந்தை கடை எண்.4 | தங்கவேல் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 8 | சென்னிமலை ரோடு வாரச்சந்தை கடை எண்.5 | S.N.சுப்ரமணியம் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 9 | சென்னிமலை ரோடு வாரச்சந்தை கடை எண்.6 | முத்தையன் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 10 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.1 | பொன்னுச்சாமி | ரூ.9,600/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 11 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.2 | D.சுப்ரமணியம் | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 12 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.3 | ராமசாமி | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 13 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.7 | M.சலீம் | ரூ.18,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 14 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.8 | சபீர் உசேன் | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 15 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.10 | பாலகிருஷ்ணன் | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 16 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.12 | சின்னச்சாமி | ரூ.11,600/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 17 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.17 | ரமேஷ் | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 18 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.19 | M.பர்வீன் | ரூ.11,500/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 19 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.20 | கலீலுல்லா | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 20 | நகரப்பேருந்து நிலைய கடை எண்.22 | பொன்னுச்சாமி | ரூ.9,300/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 21 | ஊராட்சி ஒன்றிய கடை எண்1 | தேவாணன் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 22 | ஊராட்சி ஒன்றிய கடை எண்2 | ராஜலிங்கம் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 23 | ஊராட்சி ஒன்றிய கடை எண்3 | ராமசாமி | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 24 | ஊராட்சி ஒன்றிய கடை எண்4 | ராஜலிங்கம் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 25 | ஊராட்சி ஒன்றிய கடை எண்5 | K.A. ஈஸ்வரன் | ரூ.6,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | தினசரி மார்க்கெட் இறைச்சி கடை எண்.3 | கமருதீன் | ரூ.7,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 27 | தினசரி மார்க்கெட் இறைச்சி கடை எண்.4 | சிவக்குமார் | ரூ.7,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |
| 28 | தினசரி மார்க்கெட் இறைச்சி கடை எண்.5 | சண்முகசுந்தரம் | ரூ.7,000/- | 01.04.2021 முதல் 31.03.2024 முடிய |

மேற்கண்ட வாடகை தொகைக்கு கடையினை 01.04.2021 முதல் 31.03.2024 வரை முதல் தொகுப்பு மூன்றாண்டு காலத்திற்கு கடையினை வாடகைக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1942 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 17**

**கோப்பு எண்: 1252 /2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட 1வது வார்டு ஏ.சி நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சிறுமின்விசைப்பம்பு திட்டத்தில் தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டு தண்ணீர் தொட்டியிலேயே குழாய் அமைத்து இப்பகுதி பொதுமக்கள் தண்ணீர் பிடித்து வருகின்றனர். குடியிருப்பு பகுதி அதிகமாக உள்ளதால் அனைவரும் இந்த குழாயில் வந்து தண்ணீர் பிடிப்பதற்கு மிகவும் சிரமப்படுவதாகவும் எனவே குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்களில் குழாய் விஸ்தரிப்பு செய்து பொதுக்குழாய் அமைத்து தருமாறும் இப்பகுதி பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. **5.00** இலட்சத்திற்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1943 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 18**

**கோப்பு எண்: 1259 /2021/இ1**

காங்கயம் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு பயன்படும் கணினி உபகரணங்கள் பழுதடைந்துள்ளதாகவும் எனவே, அலுவலக பணிகளான பணியாளர்களின் ஊதியம் மற்றும் Bill process, வருவாய் பிரிவு பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த குறைபாட்டை சரிசெய்ய கீழ்க்கண்டுள்ள உபகரணங்கள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. கணினி –2 எண்ணிக்கை
2. Laser jet printer (Double side) -1 எண்ணிக்கை

மேற்படி பணிகளின் அவசியம் கருதி இந்த உபகரணங்கள் வாங்குவதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 2.15 இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சத்து பதினைந்து ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1944 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 19**

**கோப்பு எண். 1344/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட அமராவதி குடிநீர் திட்டத்தின் தாளக்கரை தலைமை நீரேற்று நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 எச்.பி HSC பம்ப் செட் பழுதுகள் சரி செய்து பராமரிப்பு மேற்கொள்ளும் பணியை குடிநீர் நிதி 2021–22 ன் கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 22.10.2021–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன் மதிப்பீட்டை விட –0.10 % குறைவு
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன் மதிப்பீட்டை விட +0.85 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட –0.10 % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1945 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 20**

**கோப்பு எண். 1321/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட கோவை ரோடு ஏ.சி நகர் பகுதியின் இரண்டாவது வீதியில் வடிகால் வசதி செய்யும் பணியை பொது நிதி **2021–22** ன் கீழ் ரூ.**10.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **22.10.2021**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா – மதிப்பீட்டை விட **–0.04** % குறைவு
2. ஆர்.வடிவேல் – மதிப்பீட்டை விட +**2.86** % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.04**% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1946 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 21**

**கோப்பு எண். 1214/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட சின்னாய்புதூர், அகிலாண்டபுரம், ஏ.சி நகர், மற்றும் புலிக்கல்மேடு பகுதிகளில் குழாய் விஸ்தரிப்பு மேற்கொள்ளும் பணியை குடிநீர் நிதி **2021–22** ன் கீழ் ரூ.**1.50** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **22.10.2021**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா–மதிப்பீட்டை விட **–0.02** % குறைவு
2. ஆர்.வடிவேல்– மதிப்பீட்டை விட +**5.28** % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.02** % குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு. எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1947 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 22**

**கோப்பு எண். 1040/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட பங்களாபுதுார் பகுதியில் ஏற்கனவே உள்ள தரைமட்ட தொட்டியின் மேல் பகுதியில் ஒரு பிவிசி வாட்டர் டேங்க் அமைத்து குழாய் விஸ்தரிப்பு செய்து பொதுக்குழாய் அமைக்கும் பணியை குடிநீர் நிதி **2021–22** ன் கீழ் ரூ.**2.80** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **22.10.2021**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா–மதிப்பீட்டை விட **–0.06** % குறைவு
2. ஆர்.வடிவேல்–மதிப்பீட்டை விட +**2.20** % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **–0.06**% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1948 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 23**

**கோப்பு எண். 1233/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தாராபுரம் ரோடு, தண்ணீர் பந்தல் பகுதியில் காலியாக உள்ள இடத்தில் காளை மாட்டுச்சந்தை அமைக்க சுற்றுச்சுவர் அமைக்கும் பணியை பொது நிதி **2021–22** ன் கீழ் ரூ.**10.00** இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள **22.10.2021**–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. எஸ்.சுப்பையா–மதிப்பீட்டை விட **–0.04** % குறைவு
2. ஆர்.வடிவேல்–மதிப்பீட்டை விட +**2.44** % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட–**0.04** %குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. எஸ்.சுப்பையா அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1949 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**மன்றப்பொருள்: 24**

**கோப்பு எண் : 1623/2021 /இ1**

காஙு;கயம;  நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மூர்த்திரெட்டி பாளையம் AD காலணி குறுக்கு வீதிகளில் சாலை வசதிகள் அமைத்துதர அப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். மேற்படி இடத்தில் புதியதாக கான்கீரிட் சாலை அமைக்கும் பணி அவசியமானதாக உள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து எண்பது ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1950 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 25**

**கோப்பு எண் : 1624/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 அய்யாச்சாமி காலனி 5வது மெயின் வீதியில் வடிகால் வசதிகள் இல்லை. இதனால் மழைநீர் மற்றும் கழிவுநீர் வெளியேற வழியின்றி தேங்கி நிற்கிறது. இதனால் பொது சுகாதாரம் பாதிக்கும் நிலை உள்ளதாகவும், எனவே, இப்பகுதியில் வடிகால் வசதிகள் செய்து தருமாறும் இப்பகுதி பொதுமக்கள் கோரியுள்ளனர். எனவே, மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.25 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1951 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 26**

**கோப்பு எண் : 1625/2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 சோழன் நகர் பகுதியில் வடிகால் வசதிகள் இல்லை. இதனால் மழைநீர் மற்றும் கழிவுநீர் இப்பகுதியில் தேங்கி பொது சுகாதாரம் பாதிக்கும் நிலை உள்ளது. எனவே, இக்குறைபாட்டை சரி செய்ய இப்பகுதியில் வடிகால் மற்றும் பாலம் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1952 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 27**

**கோப்பு எண். 1438/2021/இ1**

காங்கயம் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் உள்ள பழுதடைந்த 4 எண்ணிக்கை BOV வாகனங்களை பழுதுகள் சரி செய்து பொருத்தி இயக்கும் பணியை பொது நிதி 2021–22 ன் கீழ் ரூ.5.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.10.2021–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. பிரியம் இன்டஸ்டரீஸ் அன்டு இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் – மதிப்பீட்டை விட –0.10 % குறைவு
2. அருண் இந்தியன் மோட்டார்ஸ் – மதிப்பீட்டை விட +1.20 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட –0.10 %குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். பிரியம் இன்டஸ்டரீஸ் அன்டு இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1953 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 28**

**கோப்பு எண். 1320/2021/இ1**

காங்கயம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு ஒரு Shredding machine வாங்கும் பணி மற்றும் குப்பைகளை சலிக்க ஒரு ஜல்லடை இயந்திரம் வாங்கும் பணியை பொது நிதி 2021–22 ன் கீழ் ரூ.9.75 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 28.10.2021–ல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. வீரா கன்ஸ்ட்ரக்ஷன் – மதிப்பீட்டை விட –0.03 % குறைவு
2. கங்கணம் கன்ஸ்ட்ரக்ஷன் – மதிப்பீட்டை விட +0.54 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் மதிப்பீட்டை விட –0.03 %குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திருவாளர். வீரா கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1954 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 29**

**கோப்பு எண் : 1549/2021/இ1**

காங்கயம் நகராட்சி பேருந்து நிலையத்தின் உட்புறத்தில் ஹோட்டல் சாய் சரவணபவன் என்ற உணவகம் அமைந்துள்ளது. மேற்படி உணவகத்தின் முன்பக்கம் பேருந்துகள் நிற்காமல் செல்வதால் உணவக உரிமையாளரால் வியாபாரம் செய்ய முடியாத நிலை உள்ளதாகவும், எனவே, இந்த உணவகத்தின் திருப்பூர் சாலை மார்க்கமாக உள்ள சிறிய வாயிலை விரிவுபடுத்தி கொள்ள நகராட்சியில் 21.10.2021–ல் அனுமதி வழங்க கோரி விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆய்வு செய்யப்பட்டதில் உணவகத்தில் ஏற்கனவே திருப்பூர் சாலையில் சிறிதாக ஒரு வாசல் உள்ளது. அதனை விரிவுபடுத்தி அமைப்பதினால் கட்டிடத்தின் தன்மைக்கு எந்த விதத்திலும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு இல்லை. எனவே, திருப்பூர் சாலையிலுள்ள வாசலினை விரிவுபடுத்தி கொள்ளவும். எதிர்காலத்தில் நகராட்சிக்கு கடையினை ஒப்படைப்பு செய்யும் போது பழைய நிலையில் நகராட்சியிடம் கடை குத்தகைதாரர் ஒப்படைக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் உணவக குத்தகைதாரருக்கு அனுமதி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1955 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**மன்றப்பொருள்: 30**

**கோப்பு எண் : 1699 /2021 /இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட நகரப் பேருந்து நிலையத்தில் அன்றாடம் பொதுமக்கள் அதிக அளவில் வந்து செல்கின்றனர். மேற்படி பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர இருக்கை வசதிகள் இல்லாததால் பயணிகள் நீண்ட நேரம் பேருந்திற்காக நிற்கும் நிலை உள்ளது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி நகரப் பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கு ஏதுவாக இருக்கைகளுடன் கூடிய காத்திருப்பு அறை அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாக உள்ளது. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான தொகையை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1956 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 31**

**கோப்பு எண். 1207/2021/இ1**

காங்கயம் நகராட்சிக்குட்பட்ட தண்ணீர் பந்தல் நீருந்து நிலையத்தில் உள்ள பழுதடைந்துள்ள யூனிட் –2, 40 எச்.பி மின் மோட்டாருக்கு பதிலாக நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படும் நீர் மூழ்கி மோட்டார் பொருத்தும் பணியை குடிநீர் நிதி 2021–22 ன் கீழ் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் மின்மோட்டார் விநியோகம் செய்ய 22.10.2021–இல் நடைபெற்ற டெண்டரில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சிறுவாணி வாட்டர் சப்ளை இன்ஜினியரிங் கம்பெனி – மதிப்பீட்டை விட –0.05 % குறைவு
2. ஸ்ரீ தவமணி எண்டர்பிரைசஸ் – மதிப்பீட்டை விட +0.85 % அதிகம்

**அலுவலக குறிப்பு:** மேற்காணும் பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட –0.05 %குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். சிறுவாணி வாட்டர் சப்ளை இன்ஜினியரிங் கம்பெனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1957 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**மன்றப்பொருள்: 32**

**ந.க.எண்.1738/2021/எச்1**

காங்கேயம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 1 முதல் 18 முடிய உள்ள பகுதிகளில் குடியிருப்புகள், வணிக வளாகங்கள், தொழிற்சாலை பகுதிகள், பேரூந்து நிலையம், தினசரி மார்க்கெட், வாரச்சந்தை , அரசு அலுவலகங்கள், அரசு குடியிருப்புகள், அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனை, அம்மா உணவகம், மினமயானப்பகுதி பேரூந்து நிறுத்தம் இடங்கள், காங்கேயம் பேரூந்து பணிமனை, வெளிநாடுகளில் இருந்து வந்து இந்நகராட்சி பகுதியில் வசிப்பபவர்களின் குடியிருப்புகள் ஆகிய மேற்காணும் அனைத்து பகுதிகளில் நகராட்சி தூய்மை பணியாளர்களை கெண்டு சேகரமாகும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக சேகரிக்கும் இடத்திலேயே பிரித்து வாங்கப்பட்டு வருகிறது. இக்குப்பைகளை பிரித்து வாங்குவதற்கு பயன்படும் பச்சை நிற டிரம் மற்றும் நீல நிற டிரம் மிகவும் பழுதடைந்துள்ளதால் குப்பைகளை தரம்பிரித்து பெறுவதற்கு சிரமமான சூழ்நிலை உள்ளது. எனவே, பேட்டரி வண்டியில் பொருத்தி குப்பைகளை வாங்க தேவையான பிளாஸ்டிக் டிரம்கள் 138 எண்ணிக்கை புதியதாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனத்திடம் கொள்முதல் செய்திடவும், மேலும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்திற்கு மன்றப்பொருள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார அவசர கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **தீர்மானம் எண் :** | 1958 |
| **நாள் :** | 29.10.2022 |
| **தீர்மானம் :** | அலுவலக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது |

**திரு.ம.முத்துக்குமார்**
**தனி அலுவலர்**
**காங்கயம் நகராட்சி**